


St. Francis of Paola
1416-1507
Memorial - 2 April

# புனித பவோலா பிரான்சிஸ் (1416-1507)

இவர் பவோலா என்னும் சிற்றூரில் பிறந்தார். இவருடைய பெற்றோர் ஏழைகள், புண்ணிவான்கள். இவர் சிறுவனாய் இருக்கும்போது தேவதாய்மீது அதிக பக்தி கொண்டிருந்தார். குளிர்காலத்தில் ஒருநாள் திறந்த வெளியில் முழந்தாளிட்டு தொப்பியின்றி செபமாலை செபித்துக் கொண்டிருந்தார். அவருடைய தாய் அவரைப் பார்த்து “தலையில் தொப்பி வைத்துக்கொள். இல்லாவிடில் ஜலதோஷம் பிடிக்கும்” என்றாள். அவர் தம் தாயை நோக்கி, “அம்மா, நான் ஓர் அரசியுடன் பேசினால் தொப்பி வைத்துக் கொள்ள செல்லமாட்டீர்கள். நான் இப்பொழுது மிக தூய மரியாளுடன், கடவுளின் மாதாவுடன், பரலோக பூலோக அரசியுடன் பேசிக் கொண்டிருக்கிறேன். தயவு செய்து தொப்பி வைக்க என்னை வற்புறுத்த வேண்டாம்” என்று கூறி செபமாலை செபித்து முடித்தார். ஒருநாள் அவரை தம் தோழர்களோடு போய் விளையாடும்படி தாய் சொன்னாள். அவர் “அம்மா, நான் விளையாட வேண்டுமென்று நீங்கள் உண்மையாகவே விரும்பினால் கீழ்ப்படிவேன், நானோ செபிக்க விரும்புகிறேன். கடவுளை நேசிக்க அவருக்கு சேவை செய்வதே சிறந்த நேரப்போக்கு” என்றார். இவர் ஒரு சந்தியாச சபையை தொடங்கினார். “சிறியோரின் சபை” என்று அது அழைக்கப்பட்டது. அதில் சேர்ந்தவர்கள் மற்ற சந்நியாச சபையினரை விட தங்களை தாழ்நதவர்களாகக் கருத வேண்டும். பிரான்சிஸ் தவத்தை நேசித்தார். இவர் கன்னெஞ்சரான பாவிகளை மனந்திரும்பினார். கொள்ளை நோயைத் தடுத்தார். உடல் நோய்களை குணப்படுத்தினார். செத்தவர்களுக்கு உயிர் கொடுத்தார். பாப்பரசருக்குக் கீழ்ப்படிந்து பிரான்ஸ் நாட்டுக்குச் சென்று அரசரை நல்ல மரணத்திற்கு தயாரித்தார். எட்டாவது சார்லஸ் அரசரும் பன்னிரண்டாவது லூயிஸ் அரசரும் கெஞ்சிக் கேட்டமையால் 25 ஆண்டுகளாக இவர் பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்தார். மூன்று மாதங்களாக ஏகாந்தத்தில் தம்மை சாவுக்குத் தயாரித்து தனது 91-ஆம் வயதில் பெரிய வெள்ளியன்று இறந்தார்.

## சிந்தனை:

“உடலோடு செய்யும் போரில் வெற்றி பெற்றுத்தர வல்லமை வாய்ந்த கருவி உபவாசமே. நாம் தவம் செய்வோமானால், கடவுள் நம் பாவ நாட்டங்களை அடக்குவார். நம் புத்தியை கடவுள் தம் பக்கமாய் எழுப்புவார். புண்ணியத்தில் நம்மை உறுதிப்படுத்தி உயர்ந்த சன்மானம் அளிப்பார்”.(புனித பிரான்சிஸ் பவோலா)

## செபம்:

ஆண்டவரே, மக்கள் அனைவரும் புலன்களை அடக்கி ஆள உதவி செய்யும்.


SAINTS FUN FACTS
by John Sheppard
St. Francis of Paola was an Italian hermit and founder of a community known as the Minim Friars.
He was credited with miracles and the gift of prophesy. Francis established foundations in southern Italy and Sicily and lived out his years n Plessis, France.
He remained in France after being sent by Pope Sixtus II to try and heal King Louis X.
He was canonized in 1519.
SHEPPARD
(C) 2009 John Sheppard - Distributed by Catholic Online - www.catholic.org